Registered as a Newspaper

புதன் பொய்கை

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 25

புதன்கிழமை 21 டிசெம்பர் 2022 மார்கழி 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## பகிடிவதைக் குற்றச்சாட்டு: 16 மாணவர்களுக்குத் தடை

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் - அதாவது கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இதுவரையான காலப் பகுதிக்குள் 16 மாணவர்களுக்கு பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம், விஞ்ஞானபீடம் ஆகியவற்றில் தலா 4 மாணவர்களுக்கு ஆரம்பகட்ட விசாரணைகள் முடிவடையும் வரை பல்கலைக் கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்கேற்பதற்குத் தடை விதிக்கப்பட் »15

## வடக்கு விளையாட்டு விழா: யாழ். மாவட்டம் முதலிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

2022 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் யாழ்ப்பாண மாவட்டம் முதலிடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் இடையேமாகாணமட்ட விளையாட்டுப்போட்டி துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. »15

யாழ். மாவட்டத்தில்

# பல தசாப்தங்களின் பின்னர் உவர்நீரின் செறிவு குறைகிறது

### நீரேரிகள் புனரமைக்கப்பட்டதன் விளைவு என்கிறார் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 21**

**யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நீரேரிகள் புனரமைக்கப்பட்டு மழை நீர் தேக்கப்பட்டதன் காரணமாக, குடாநாட்டு நீர் நிலைகளில் உவர்நீரின் செறிவு குறைவடைய ஆரம்பித்துள்ளது. முறையான திட்டமிடல்கள் மற்றும் மக்களுக்கான விழிப்புணர்வு ஊடாகவே இதனைத் தக்க வைக்க முடியும் என்பதுடன், மேலும் உவர்நீரின்செறிவை குறைக்க முடியும் என்று யாழ்ப்பாண மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் குணராஜ் சுஜீவன் தெரிவித்தார்.** »15

ஜனவரியிலிருந்து

**10 மணிநேர மின்வெட்டு?**

விரிவு:- பக்.14

**சதொசவில் விலை குறைப்பு**

விரிவு:- பக்.10

## தேடுவதோ போதைப்பொருளை; கிடைப்பதோ உணவில்லாத பெட்டிகளே

### கிளிநொச்சியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 21



இந்த நாட்டில்பாடசாலைக் கல்விக் கட்டமைப்பு முறையை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பைகளை போதைப்பொருளுக்காக தற்போதைய அரசாங்கம் சோதனை செய்கிறது. ஆனால், போதைப்பொருளுக்கு பதிலாக வெற்று உணவுப் »15

உயிர்கொல்லி

## போதைப்பொருள் பாவனையை தடுக்க ஜனாதிபதி செயலணி

கொழும்பு, டிசெ. 21

உயிர்கொல்லி போதைப்பொருள் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் பாவனையைத் தடுக்க ஜனாதிபதியின் விசேட செயலணியொன்றை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மற்றும் ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி அலுவல »15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ள

# விடுதலைப்புலிகளை விடுவிக்க வேண்டும்!

சம்பிக்க வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 21

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய பிரபலங்கள் வெளியில் சுதந்திரமாக உள்ளபோது, அந்த அமைப்பின் 31 போராளிகளைத் தொடர்ந்து சிறையில் தடுத்து வைப்பது பயனற்றது. ஆகவே அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு கொள்கை அடிப்படையில் தீர்வுகாண வேண்டும். நாட்டில் முதலாவது அரசியல் கட்சி தோற்றம் பெற்று 100 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. எனினும் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியமான பிரபலங்களான குமரன் பத்மநாதன் உள்ளிட்ட தரப்பினர் வெளியில் சுதந்திரமாக உள்ள போது 31 போராளிகளைத் தொடர்ந்து சிறையில் தடுத்து வைப்பது பயனற்றது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையுடன் தொடர்புடையதாகக் குறிப்பிடப்பட்ட தரப்பினர் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனவே விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களை விடுதலை செய்து இந்தப் பிரச்சினையை மறக்கவேண்டும். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும். தொல்பொருள் மற்றும் வனவளபாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும்- என்றார். (ம-14,இ)

## தினேஸ் சாப்டர் கொலை 30 பேரிடம் வாக்குமூலம்!

சர்ச்சைக்குரிய குறுஞ்செய்தி தொடர்பிலும் ஆராய்வு

கொழும்பு, டிசெ. 21

வர்த்தகர் தினேஸ் சாப்டர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் சுமார் 30 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவர்களில் 15 பேர் மீது சந்தேகம் உள்ளது என குற்றப் புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜனசக்தி குழுமத்தின் தலைவரும் பிரபல வர்த்தகருமான தினேஷ் சாப்டர் பொரளை பொதுமயானப் பகுதியில் தனது காரில் கைகள் கட்டப்பட்டு கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப்பிரிவினரும் இணைந்து கொலைச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். அதற்கமைய சாப்டரின் மனைவியிடம் முதற்கட்ட வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டதுடன் 30 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

வீட்டை விட்டு வெளியேறிய சாப்டர் நேரடியாக பொரளை மயானத்துக்கு சென்றுள்ள நிலையில் அவரது காரின் பின்னால் சந்தேகத்துக்கிடமான வாகனம் ஒன்று பயணித்தமை சிசிரிவி காட்சிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுகுறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸுக்கு சாப்டரின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது. சாப்டரை கொலை செய்தவரே இந்தக் குறுஞ்செய்தியை சாப்டரின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து பிரையன் தோமஸுக்கு அனுப்பியுள்ளார் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. அத்துடன் கொலை இடம்பெற்ற நேரத்தில் பிரையன் தோமஸ் வீட்டில் தங்கியிருந்தமை அவரது வீட்டிலுள்ள சிசிரிவி காட்சிகள் மூலம் உறுதியாகியுள்ளது. (ச-இ)

## நாட்டை வந்தடையவுள்ள 14 நிலக்கரிக் கப்பல்கள்!

கொழும்பு, டிசெ. 21

14 நிலக்கரிக் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாமல் ஹேவகே தெரிவிக்கையில்,

இதுவரை 5 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைந்தன. இதற்கு முன்னர் நிலக்கரியை கொண்டுவருவதற்கான விலைமனு நிராகரிக்கப்பட்டதையடுத்து, வேறு முறைமையின் மூலம் மேலும் மேலும் 12 நிலக்கரி கப்பல்களை நாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. 3 நிலக்கரி கப்பல்கள் மூலம் 3 லட்சம் மெற்றிக் தொன் நிலக்கரி இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் 28 நிலக்கரி கப்பல்களைக் கொண்டுவர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## இந்திய மீனவர்கள் விடுவிப்பில் மோடியின் தலையீடே காரணம்

புதுடில்லி, டிசெ. 21

இலங்கையில் சிறைப்படுத்தப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள் என்றால், அதற்கு இந்தியப் பிரதமர் மோடி இலங்கைத் தலைவர்களுடன் தொடர்பில் இருப்பதே காரணம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் தொர்ச்சியாக தொடர்பில் இருக்கின்றார். பல தடவைகள் மோடி இலங்கைத் தலைவர்களுடன் பேசியுள்ளார். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் தற்போது விடுதலை செய்யப்படுகின்றார்கள் என்றால் அதற்கு சென்னையிலிருந்து யாரோ கடிதம் எழுவது காரணமில்லை. புதுடில்லியில் யாரோ இதனைக் கையாள்வதே காரணம் - என்றார். (ம)

## இலங்கையின் ஜெனிவாப் பிரதிநிதியாகின்றார் ஹிமாலி சுபாஷினி டி சில்வா

கொழும்பு, டிசெ. 21

சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக ஹிமாலி சுபாஷினி டி சில்வா அருணதிலக்கவை நியமிக்க, நாடாளுமன்றத்தின் உயர் அதிகாரிகள் குழு அனுமதி வழங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வால் நியமிக்கப்பட்ட சீ.ஏ.சந்திரபிரேமவின் இடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார். சந்திரபிரேம என்பவர் 'கோத்தாஸ் வோர்' எனப்படும் கோத்தாபயவின் போர் தொடர்பில் புத்தகம் எழுதிய புத்தக ஆசிரியராவார். அந்தப் புத்தகத்தின் காரணமாகவே ஜெனிவாவில் அவருக்கு அந்த உயர் இராஜதந்திரப் பதவி கிடைத்ததென குற்றஞ்சாட்டப் பட்டது. ஜெனிவாவில் புதிய நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ள ஹிமாலி சுபாஷினி டி சில்வா அருணதிலக்க, இதற்கு முன்னர் நேபாளத்துக்கான இலங்கைத் தூதுவராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## இறைவரிச் சட்டம்: சபாநாயகர் ஒப்பம்

கொழும்பு, டிசெ. 21

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டத்தில் நேற்று கையொப்பமிட்டு அதைச் சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்.

மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிக வருமானம் ஈட்டும் அனைவரும் இறைவரித் திருத்தச்சட்ட வரி விதிப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இந்தச் சட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

இந்த நிலையில், இந்த இறைவரிச் சட்டத்தில் நேற்று ஒப்பமிட்டு அதை சபாநாயகர் சான்றுப்படுத்தினார். இதையடுத்து இறைவரித் திருத்தச் சட்டம் நடைமுறையாவது உறுதியாகியுள்ளது. (ம-14,இ)

## 'போர்ட் சிற்றி'க்கு புதிய விசா வகை

அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 21

கொழும்பு துறைமுக நகரத்துக்கு புதிய விசா வகைகளை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரத்தில் நிறுவுவதற்குள்ள சர்வதேச வணிகம், கப்பற்றுறை நடவடிக்கைகள், நிதி, தகவல் தொழிநுட்பம் மற்றும் சுற்றுலா போன்ற பல்வேறு சேவைகளுக்காக வருகை தரவுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய குறித்த தரப்பினர்களுக்கு விசா வழங்கல் மற்றும் அதற்குரிய பணிகள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருசுவில் படுகொலை: நினைவேந்தல் நேற்று!



யாழ்ப்பாணம், டிசெ. 21

2000ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியில் வைத்து இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட எட்டுப் பேரின் 22ஆவது ஆண்டு நினைவேந்தல் மிருசுவில் தேவாலயத்துக்கு முன்பாக நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

போர்க்காலத்தில் தமது வீடுகளை விட்டு வெளியேறிய எட்டுப் பொது மக்கள், மீண்டும் தமது வீடுகளைச் சென்று பார்ப்பதற்காக மிருசுவிலுக்குச் சென்றபோது 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் 22ஆவது நினைவேந்தல் நேற்று உருக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டன.

இராணுவத்தால் கொடூரமாகத் தாக்கப்பட்ட நபரொருவர் பலத்த காயங்களுடன் தப்பிவந்து தனது உறவினர்களுக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள் மலசலகூட குழியொன்றிலிருந்து மீட்கப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-20,66,27,125)

## போதைப்பொருள் கடத்தல் விவகாரம்; திருச்சியில் 9 இலங்கையர்கள் கைது

சென்னை, டிசெ. 21

ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள்களை கடத்த முயற்சித்த வழக்கில் இலங்கையைச் சேர்ந்த 9 பேரை இந்திய தேசிய புலனாய்வு முகவர் அமைப்பின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் தமிழகத்தின் திருச்சி சிறப்பு முகாமில் கைது செய்துள்ளனர்.

குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களை தடுத்து வைப்பதற்காக திருச்சி மத்திய சிறை வளாகத்தில் சிறப்பு முகாம் இயங்கி வருகிறது. இதில் 80 இலங்கைத் தமிழர்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 132 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கிருந்த 9 பேரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து இந்தியா மற்றும் இலங்கைக்கு ஆயுதங்கள், போதைப் பொருள்கள் கடத்தப்படுவது தொடர்பாக இந்தியத் தேசிய புலனாய்வு முகவர் அமைப்பு கடந்த ஜூலை 8 ஆம் திகதி தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்திருந்தது. விசாரணையில் திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இலங்கையர்களுக்கும் ஆயுதங்கள், போதைப் பொருள் விற்பனையாளரான பாகிஸ்தானைச் சேர்ந்த ஹாஜி சலீம் என்பவருக்கும் தொடர்பிருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, தமிழகத்தில் சென்னை, திருப்பூர், செங்கல்பட்டு உட்பட 22 இடங்களில் இந்திய தேசிய புலனாய்வு முகவர் அமைப்பின் அதிகாரிகள் கடந்த ஜூலை 20ஆம் திகதி தேடுதல்களை நடத்தினர். திருச்சி சிறப்பு முகாமில், இந்திய தேசிய புலனாய்வு முகவர் அமைப்பின் துணை பொலிஸ் ஆணையாளர் காளிராஜ் மகேஷ்குமார் தலைமையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தர்மராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் குழு கொமண்டோ படையினரின் உதவியுடன் தேடுதல்கள் நடத்தப்பட்டன.

தேடுதலில் சிறப்பு முகாமில் இருந்து 70 அலைபேசிகள், சிம் அட்டைகள், பென்டிரைவ், கணனி வன்பொருள் தட்டு, மடிக்கணனி மற்றும் முக்கியமான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை கேரளா மாநிலத்துக்குக் கொண்டு சென்ற தேசிய புலனாய்வு முகவர் அமைப்பின் அதிகாரிகள், தொடர்ந்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில், இந்திய தேசிய புலனாய்வு முகவர் அமைப்பின் அதிகாரிகள் குழுவின் 8 அதிகாரிகள் நேற்றுமுன்தினம் காலை மீண்டும் திருச்சி சிறப்பு முகாமுக்கு சென்று அங்கிருந்த இலங்கையைச் சேர்ந்த 9 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளனர். ஏற்கனவே தொடரப்பட்ட ஆயுதக் கடத்தல் வழக்கில், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இருப்பதால் மேற்படி 9 பேரும் மேலதிக நடவடிக்கைகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். (எ-இ)

## வீதிகளை உடன் சீரமைக்குமாறு தென்மராட்சியில் ஆர்ப்பாட்டம்!

சாவகச்சேரி, டிசெ. 21

நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாதுள்ள வீதிகளைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று மீசாலை வடக்கு, கொயிலாமனை மற்றும் மந்துவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக வீதிகள் சீரமைக்கப்படாதுள்ளன என்றும், அதனால் மக்கள் போக்குவரத்தில் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சுட்டிக்காட்டினர்.

பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மக்களுக்கு உறுதியளித்தார். (எ-9)

## வடமாகாணத்தில் மழை தொடரும்!

கொழும்பு, டிசெ. 21

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் அவ்வப்போது பலத்த மழை பெய்யும். மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

கொழும்பில் இருந்து புத்தளம், காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்புடன் காணப்படும். தெற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றமுக்கத் தாழமுக்கம், அடுத்த இரு தினங்களில் மெதுவாக மேற்கு வடமேற்கு திசையில் இலங்கைக் கரையை நோக்கி நகர்ந்து செல்லும். எனவே இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம-14)

## சட்டவிரோத மது விற்பனை: ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 21

காரைநகரில் அளவுக்கதிகமான மதுப் போத்தல்களை வைத்திருந்து விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் இந்துக் கல்லூரிக்கு முன்பாக சட்டவிரோதமாக மதுபான விற்பனை நடக்கின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய, பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கு இடமான ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவரிடம் இருந்து 52 கால் போத்தல் சாராயம் கைப்பற்றப்பட்டது என்றும், விற்பனை நோக்கத்துக்காக அவற்றை அவர் வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

### போதைப்பொருளிலிருந்து

## மாணவர்களை பாதுகாப்பதற்கு அனைவரும் ஆதரவு வழங்குக

### ஐ.ம.முன்னணியின் தலைவர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 21



உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையில் இருந்து மாணவர்களை பாதுகாப்பதற்கு அனைவரும் தங்களது முழு ஆதரவை வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருள் மாபியாக்களினால் பாடசாலை மாணவர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அதனாலேயே, போதைப்பொருள் பாவனையில் இருந்து மாணவர்களை பாதுகாப்பதற்கு காத்திரமான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு பெற்றோர்கள் உள்ளிட்ட அனைவரும் முழு ஆதரவையும் வழங்க வேண்டும் - என்றார். (ம-14,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் கதை



ஏழ்மூன்று நாட்களாயுனை எண்ணித் தவமிருந்தோம்
பாழ்நிலையைப் பாராயோ தயாபரனே- பார்த்தாயேல்
வருந்துமெம் நிலைகண்ட காரிரும்பும் கசிந்துருகும்
அரசடி விநாயகனே எம்மையும்பார்
-முருகு

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி

# ஜனாதிபதியாகும் கனவுடன் சூழ்ச்சி செய்கின்றார் ரணில்

முன்னிலை சோஷலிஸக் கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 21

2023ஆம் ஆண்டு இறுதியில் ராஜபக்ச, சஜித் அணி மற்றும் தமிழ் தரப்புகள் ஆதரவுடன் ஜனாதிபதி வேட் பாளராக வருவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகிறார். அதற்கான முன்னேற்பாடே தமிழ் மக் கள் பிரச்சினையை தீர்க்கப்போவதாக அவர் காட்டிக் கொள்ளும் முன்னெடுப்புக்கள் என்று முன்னிலை சோஷலிஸக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழர்களின் மக்கள் பிரதிநிதி கள் இது தொடர்பில் விளங்கிக் கொள்ளவேண்டும் என்றும் அந் தக் கட்சி அறிவுறுத்தியது.

முன்னிலை சோசலிஸக் கட்சி யின் பொதுச்செயலாளர் குமார் குணரட்னம் அண்மையில் நடத் திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இனவாதத்துக்கு எதிரான தன் மையை காலிமுகத்திடல் போராட் டத்தில் கண்டோம். ஆனால், தற்போது இன ஒற்றுமையைப் பிரிக்க முயற்சிக்கின்றனர். போராட்டத்துக்கு இடமளிக்கமாட் டேன் என ராஜபக்சவினருக்கு ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி யளித்துள்ளார். இராணுவம், பொலிஸ், புலனாய்வுத்துறை என்பன போராட்டத்தை அடக்க முனைப்புக் காட்டுகின்றன. பயங் கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி போராட்டத்தை அடக்க முயல்கின்றனர்.


அது தொடர்பாக யாழ்ப்பாண மக் களுக்கு அனுபவமுண்டு. சிங் கள மக்களுக்கு அது புதியதே.

நடுத்தர வர்க்கத்தை இலக்கு வைத்து தனியார் பல்கலைக் கழ கத்தை உருவாக்க முயற்சிக்கி றார்கள். சாதாரண மக்கள் பொரு ளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு எதி ராக மாணவர்கள், தொழிலாளர் கள், விவசாயிகள் விரைவில் மீண்டும் கிளர்ந்தெழுவர்.

தேர்தலொன்று நடந்தால் அதனு டன் இணைந்ததாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு புதிய அரசமைப்புக் கொண்டுவர வேண் டும். நாடாளுமன்ற முறைமை இருக்கட்டும். மக்கள் அதிகாரம் கொண்ட மக்கள் சபைகள் பிர தேச வாரியாக உருவாக்கப் பட வேண்டும் - என்றார். (ம-20)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர் கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதர வகையில் எதிர் பார்த்த காரியம் சாதகமாகும். பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படு வீர்கள். நண்பர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். மனஸ்தாபம் ஏற்படும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோ சனை அவசியம். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர் களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும் .

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரி களால் ஏற்பட்ட தொல்லைகள் வில கும். ஆதாயம் உண்டாகும். குடும் பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பா ராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்க வும். வழக்கமான பணிகளிலும் கூடு தல் கவனம் தேவை. உடல்நலம் பாதிக்கப்பட்டாலும் சரியாகிவிடும். கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கருத்து வேறுபாடுகள் நீங்கும். குடும்பத்தி னரின் தேவைகளை நிறைவேற்று வீர்கள். உறவினர்களிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.



# கலாசார பண்பாட்டுடன் மார்கழி இசை நிகழ்வு!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகம் மற்றும் யாழ்ப்பாண வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசை நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலா சபதி கலையரங்கில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த னிக்கி ழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெய சேகரம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாண கலை, கலாசாரப் பண்பாடு களை உள்ளடக்கி இந்த இசை விழாவை முன்னெடுக்கவுள்ளோம். அத்துடன் உள் ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகை யில் குறித்த உற்பத்தியாளர்களினுடைய கண்காட்சியும் யாழ். பல்கலைக்கழக கைலா சபதி கலையரங்குக்கு அண்மையிலுள்ள மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உள்ளூர் கலைஞர்களின் திறமைகளை யும் அவர்களுடைய கலைத்திறனையும் வெளிக்கொணரும் முகமாக குறித்த நிகழ்வு கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இசை நிகழ் வில் இலங்கைக் கலைஞர்கள் மட்டுமன்றி இந்தியக் கலைஞர்களும் கலந்துகொள்ள வுள்ளனர். இந்த நிகழ்வுகளுக்கு எந்தவிதக் கட்டணங்களும் அறவிடப்படாது. பொதுமக் கள் அனைவரும் கலந்து கொண்டு பயன டையலாம் - என்றார். (ச-125)

# 71 குடும்பங்களுக்கு காணிப் பத்திரங்கள்

முல்லைத்தீவு, டிசெ. 21

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலிநகர் மற்றும் அம்பாள்புரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 71 குடும்பங்களுக்கு காணிப் பத்திரங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் நீண்ட காலமாக காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாத நிலையில், பிரதேச மக்களுக்கான காணிப் பத்திரங்களை துரித கதியில் வழங்கும் செயற்றிட்டங்கள் பிரதேசசெயலர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்க மையவே பாலிநகர் கிராம அலுவலர் பிரிவு மற்றும் அம்பாள் புரம் கிராம அலுவலர் பிரிவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 71 பேருக்கு காணிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. (ம-14,113)



# ஏழாலை வித்தியாலயத்தில் நூற்றாண்டுக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

ஏழாலை மகாவித்தியாலய பாடசாலைச் சமூகமும், கல்வி அபிவிருத்திச் சபை நம்பிக்கை நிதியமும் இணைந்து நடத்திய யாழ்ப்பாணம் ஏழாலை மகா வித் தியாலயத்தின் நூற்றாண்டு ஞாபகார்த்த நிகழ்வும் மலர் வெளியீடும் கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனை மருத்துவர் மருத்துவக் கலாநிதி செ.சிவகுமார், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.மோக னாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது புனரமைக்கப்பட்ட பாடசாலையின் முகப்பு வளைவு, புதிதாக அமைக்கப்பட்ட நூற்றாண்டு ஞாப கார்த்தக் கட்டடம் மற்றும் பிரதான மண்டபம் என்பன திறந்து வைக்கப்பட்டன. தொடர்ந்து சந்நிதியான் ஆச் சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள், தெல்லிப் பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால் சிரமங்கள் எனும் மலையை வென்று விடலாம்" – மகாத்மா காந்தி

## சொல்ஹெய்ம்; ஏமாற்றும் வியூகமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் – இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே அமைதிப் பேச்சுக்கள் நடைபெற்றபோது, பேசுபொருளாக இருந்த நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின்பெயர்இப்போது மீண்டும் இலங்கை விவகாரங்களில் அடிபட ஆரம்பித்திருக்கின்றது.தமிழர் தரப்புடன் இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விருப்பம் வெளியிட்டிருக்கும் இந்தச் சமயத்தில், எரிக் சொல்ஹெய்மின் பிரசன்னம் மீண்டும் நிகழ்ந்திருக்கிறது. அண்மைய நாள்களில் அவர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனும், பெரும்பான்மைக் கட்சிகளின் தலைவர்களுடனும் சந்திப்புக்களை முன்னெடுத்திருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் – இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமானபோது எரிக் சொல்ஹெய்ம் அதில் முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருந்தார். இந்த அமைதிப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் பிரதமராகப் பதவி வகித்திருந்தார். போரியல் ரீதியாக விடுதலைப் புலிகள் பலம் பெற்றிருந்த நிலையில், இலங்கை இராணுவத்தினர் தொடர் போராலும் தோல்விகளாலும் துவண்டிருந்த நிலையில், அமைதிப் பேச்சு வார்த்தை என்ற அஸ்திரத்தைக் கையில் எடுத்திருந்தார் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. சிதைவடைந்திருந்த இலங்கை இராணுவத்தைக் கட்டியமைக்கவும், போருக்கான சர்வதேச ஆதரவை திரட்டிக் கொள்வதற்கும், புலிகளை பிரித்து பலவீனப்படுத்தவும் பேச்சுக்கான காலப்பகுதியை ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்திக்கொண்டார்.

இந்தப் பேச்சுக்களில் மத்தியஸ்தம் வகித்த நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் செயற்பட்ட விதத்தில் தமிழ் மக்களிடையே பலத்த விமர்சனங்கள் உண்டு. இலங்கை அரசாங்கமும், துணை இராணுவக் குழுக்களும் அமைதிப் பேச்சுக் காலத்தில் மேற்கொண்ட அத்துமீறல்களை எரிக் சொல்ஹெய்ம் கட்டுப்படுத்த தவறியிருந்தார். அந்தக் காலப் பகுதியில்தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த கருணா, ரணில் விக்கிரமசிங்கவால் தந்திரமாகப் பிரித்தெடுக்கப்பட்டிருந்தார். ஆனால், சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அரசாங்கத்தின் அத்துமீறல்களைக் கண்டுகொள்ளவில்லை. இவற்றால் ஏற்பட்ட நம்பிக்கையீனமே தமிழீழ விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்களில் இருந்து பின்னகர்த்தியிருந்தது. சுருக்கமாகக் கூறுவதானால், அமைதிப் பேச்சுக்களில் நடுநிலைமையில் இருந்து செயற்படத் தவறியிருந்த எரிக் சொல்ஹெய்ம், இலங்கைஅரசாங்கம் சுதாகரித்துக் கொள்வதற்கான கால அவகாசத்தையே உருவாக்கியிருந்தார் என்று கூறலாம்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றிருக்கும் நிலையில் எரிக் சொல்ஹெய்ம் ரணில் விக்கிரமசிங்கவால் மீண்டும் களமிறக்கப்பட்டுள்ளார். தமிழர் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகவும் சமகாலத்தில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அன்று எரிக் சொல்ஹெய்ம் வந்திறங்கிய சூழ்நிலைக்கும் இப்போது வந்திறங்கியிருக்கும் சூழ்நிலைக்கும் ஒற்றுமை இருக்கின்றது. போரில் தோல்விகளைச் சந்தித்து திணறிய நிலையில் வெளிநாடுகளின் உதவிகளை அரசாங்கம் சர்வதேச நாடுகளிடம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது எரிக் சொல்ஹெய்ம் சமாதானத் தூதுவராக உள்நுழைந்தார். இப்போது கடும் பொருளாதார நெருக்கடியால் உலக நாடுகளின் ஒத்துழைப்பை எதிர்பார்த்திருக்கும் நிலையில் எரிக் சொல்ஹெய்ம் களமிறக்கப்பட்டுள்ளார்.

மீண்டும் அதே சூழ்நிலை – அதே கூட்டு, போர் மட்டும் தான் இல்லாத குறை. இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சின் மறைமுக மத்தியஸ்தர் போன்ற தோரணையிலேயே தமிழ்க் கட்சிகளுடன் எரிக் சொல்ஹெய்மின் சந்திப்புக்கள் அமைந்திருக்கின்றன. எரிக் சொல்ஹெய்ம்மை முன்னிறுத்தி ரணில் விக்கிரமசிங்க இன்னுமொரு தடவை தமிழ் மக்களை ஏமாற்றும் தந்திரத்துக்கு தமிழ்த் தலைமைகள் இடமளிக்கக்கூடாது. இலங்கை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள வேண்டுமானால் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ள நிலையில், அதிகபட்ச அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளவே முயற்சிக்கவேண்டும். காலம் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைத் தராது.



# எக்னலிகொடவினது சாபம் ராஜபக்சவினருக்கு நீங்காது

## மனைவி சந்தியா ஆதங்கம்



கொழும்பு, டிசெ. 21

பிரகீத் எக்னலிகொடவுக்கு நீதி கிடைக்கும்வரை ராஜபக்சக்கள் சாபங்களிலிருந்து விடுபடமுடியாது என காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. ஊடகத்துக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனவரி மாதத்துடன் எனது கணவர் பிரகீத் எக்னலிகொட காணாமற்போய் 12 வருடங்களாகிவிட்டன. அவரது தலைவிதிக்கு காரணமான ராஜபக்சக்களுக்கு கடும் சாபத்தை வழங்குவதற்காக நான் எனது தலையை மழித்து கறுப்பு ஆடை அணிந்தேன். எனது கணவருக்கு நீதி கிடைக்கும் வரை அந்தச்சாபம் நீங்காது. அதேபோல் நாட்டில் காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உதவ வேண்டும் - என்றார்.

(ச-இ)

# புலம்பெயர் இலங்கையர்களுக்கு அலுவலகம் அமைக்க அனுமதி

கொழும்பு, டிசெ. 21

புலம்பெயர்வாழ் இலங்கையர்களின் விவகாரங்களைக் கையாள்வதற்கான அலுவலகத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்கின்ற 3 மில்லியன் இலங்கையர்களின் ஒத்துழைப்புக்களை நாட்டின் அபிவிருத்திக்காகப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாகும் வகையில்,'புலம்பெயர்வாழ் இலங்கையர் விவகாரங்களுக்கான அலுவலகம்' ஒன்றை ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவுவதற்கும், அலுவலகத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக மேற்கொண்டு செல்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தார்.

இதையடுத்து, புலம்பெயர் இலங்கையர்கள் அலுவலகமானது ஜனாதிபதி செயலகத்தின் கீழ் செயற்படும். புலம்பெயர்வாழ் இலங்கையர்களின் ஒத்துழைப்புக்களை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதற்காக, மத்திய ஒருங்கிணைப்பு நிலையமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புலம்பெயர்வாழ் இலங்கையர் விவகாரங்களுக்கான அலுவலகம் நிறுவப்படும் என ஜனாதிபதி அறிவித்திருந்தார். இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(ம-14.44)

நாளை

22.12.2022

வியாழக்கிழமை

மார்கழி 07

சுபநேரம் : 07.55 - 09.25

ராகுகாலம் : 01.55 - 03.24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி பேருந்துகளில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்

வவுனியா, டிசெ. 21

ஆரோக்கியமான பேருந்துப் பயணத்தை வலியுறுத்தி, 'பாதுகாப்பான பயணத்துக்காக, பாலியல் தொந்தரவுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் வவுனியாவில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பேருந்துகளில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. பெண்கள் அபிவிருத்திக்குழு மற்றும் வவுனியா மாவட்டச் செயலகம் ஆகியவை இணைந்து இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்தன. (ம-14,110)





## முன்பள்ளி மாணவருக்கு இலைக்கஞ்சி வழங்கல்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களில் போசாக்கை மேம்படுத்துமுகமாக இலைக்கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் தவிசாளர் நடனேந்திரன் தலைமையில் அராலி மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபையும், வலி.மேற்கு ஆயுள்வேத பாதுகாப்பு சபையும் இணைந்து முன்னெடுக்கப்பட்ட இலைக்கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் ஒவ்வொரு மாதமும் 200 மாணவர்களை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படவுள்ளது. இலைக் கஞ்சி வழங்கும் நிகழ்வில் வலி.மேற்கு பிரதேசசபை தவிசாளர் த.நடனேந்திரன், வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினரும் ஆயுள்வேத மருத்துவருமான சதாசிவம்பிள்ளை, முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-14,125)



திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீட மாணவர் ஒன்றியத்தால் சைவ சமய கலாசாரங்களை பிரதிபலிக்கும் போட்டிகள் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்டன.(எ-125)

## வரணி பொதுநூலகத்துக்கு தேசிய மட்டத்திலான விருது



கொடிகாமம், டிசெ. 21

தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகளில் சிறந்த செயற்பாடுகளை மேற் கொண்டமைக்காக தேசிய மட்டத்திலான விருதை வரணி பொதுநூலகம் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டு வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணி பிரதேசத்தில் உள்ள 11 பாடசாலைகளுக்கும் சென்று நூலகக் கண்காட்சியை நடத்தி அந்தப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்பு மாத போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்கி பிரதேச மக்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் வகையில் பல செயற்றிட்டங்களை வரணி பொதுநூலகம் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-159)



தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் கடந்த 25ஆம் திகதி நடத்தப்பட்ட தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டியில், கிளிநொச்சி மாவட்ட செயலகம் இரண்டாவது தடவையாக முதலிடத்தை பெற்றுள்ளது. (ய-27)



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் விழுதுகள் அமைப்பின் ஏற்பாட்டில், இலவச மருத்துவ முகாம் பூநகரி முக்கொம்பன் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் 250க்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். அத்துடன் கண்கள் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மூக்குகண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (ய)



தென்னிந்தியாவின் பின்னணிப் பாடகரும் நடிகருமான ஏ.எம்.ராஜாவின் 93ஆவது நினைவு தினத்தையொட்டி கலட்டி மெதடிஸ் மிஷன் பாடசாலையின் 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் சமூகப் பணியில் ஈடுபட்டுவரும் 10 பேருக்கு ஏ.எம். ராஜா ஞாபகார்த்த விருதும் சான்றிதழும் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 2022 ஆம் ஆண்டுக்கான நத்தார் இன்னிசை வழிபாடு, தென்னிந்திய திருச்சபையின் வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் போதகர்கள், கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ம-14,125)




முல்லைத்தீவு- கணுக்கேணி வட்டாரத்திலுள்ள சில இடங்களில் நேற்றுமுன்தினம் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டன. பொதுமக்களின் தொடர் கோரிக்கைக்கமைவாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் நிதியில் இவை பொருத்தப்பட்டன. (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற." -வள்ளுவர்

# உயிர்க்காவு கொடுத்த பின்னரும்கூட உதயனின் வருகை துணிச்சலானது!

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறீசற்குணராஜா புகழுரை

இராணுவக் கட்டுப்பாட்டுக்காலத்திலும், தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய கட்டுப்பாட்டுக் காலத்திலும், இடம் பெயர்ந்த காலத்திலும் கூட உதயன் பத்திரிகை தனது கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக வெளிவந்த உதயன் தன் ஊடகப்பணியின் போது உயிர்களையும் காவு கொடுக்கவேண்டியிருந்தது. இவ்வாறான உயிரிழப்புக்கு முகம் கொடுத்த பின்னரும், தொடர்ந்தும் பத்திரிகை வெளிவருவதென்பது மிகக் கடினமானது இவ்வாறு புகழ்மாலை சூட்டினார் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறீசற்குணராஜா.

உதயனின் 38 ஆவது வருட நிறைவு நிகழ்வு அண்மையில் உதயன் தலைமைப்பணிமனையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

யூதர்களை எவ்வாறு அடித்து விரட்டினார்களோ அவ்வாறு தமிழர்களாகிய எங்களையும் அடித்து விரட்டி, எங்களுடைய இருப்புகளையெல்லாம் அழித்த ஒரு யுத்த சூழலில்தான் உதயனின் பிறப்பு நிகழ்ந்தது. கொழும்பை மையமாகக் கொண்டு எத்தனையோ பத்திரிகைகள் இயங்கிக் கொண்டிருந்தாலும் கூட பிராந்திய பத்திரிகையில் உதயனை யாரும் மிஞ்சிவிட முடியாது. தொடக்ககாலத்தில் புளொட் அமைப்பு ஒரு காலத்தில் பலமாக இருந்தது. பின்னர் ரெலோ பலமாக இருந்தது. அதற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பலமாக செயற்பட்டது. அந்த காலப்பகுதிகள் எல்லாம் எத்தனையோ பத்திரிகைகள் வெளிவந்தன. இராணுவக் கட்டுப்பாட்டுக்காலத்திலும், தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய கட்டுப்பாட்டுக் காலத்திலும், இடம் பெயர்ந்த காலத்திலும் கூட உதயன் பத்திரிகை தனது கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக வெளிவந்த உதயன் தன் ஊடகப்பணியின் போது உயிர்களையும் காவு கொடுக்கவேண்டியிருந்தது . இவ்வாறான உயிரிழப்புக்கு முகம் கொடுத்த பின்னரும், தொடர்ந்தும் பத்திரிகை வெளிவருவதென்பது மிகக் கடினமானது.

இவ்வாறான பத்திரிகை தர்மத்தை கடைப்பிடிப்பது மிக மிகக் கடினம். எத்தனையோ ஊடகவியலாளர்களை இழந்த பின்னரும் தொடர்ந்தும் வெளிவருவதென்பது உதயனுக்கு மட்டும் சிறப்பல்ல, எங்களுடைய பிரதேசத்துக்கும் உதயனின் இத்தகைய துணிச்சலான வெளிவருகை ஒரு சிறப்பு அடையாளமாக நிலைபெற்றுள்ளது.

இழப்பு என்பது எமது பிரதேசத்துக்கு பழகிப்போய்விட்டது போலும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது உலகத் தமிழராய்ச்சி மகாநாட்டின் படுகொலை நடந்த பொழுது ஆரம்பமானது. இன்று எமது பல்கலைக்கழகமும் எத்தனையோ பேரை இழந்திருக்கின்றது. பல மாணவர்களையும் இழந்திருக்கின்றோம். காணாமலும் போயிருக்கின்றார்கள். அவர்கள் எங்கு என்றே தெரியவில்லை.

வரலாற்றோட்டத்தின் அடிப்படையில் தமிழர்தேசத்தின் முதல் பத்திரிகையாக உதயனைப் பார்க்கமுடியும். உதயனின் வளர்ச்சிக்கு அதன் பிரதம ஆசிரியராக இருந்த கானமயில்நாதன் எவ்வளவு அர்ப்பணிப்புடன் பணியாற்றினார் என்பதை நானறிவேன். மிக இறுக்கமான சூழல்களிலும் அவர் பத்திரிகையைத் திறம்பட நடத்தியவர். நல்லவேளையாக அவரைக் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் இடம்பெறாமல் தப்பிவிட்டார். அந்தளவுக்கு பத்திரிகையை நடத்துவதென்பது அந்தக்காலத்தில் உயிருக்கு சவாலான, மனதுக்கு அழுத்தம் தரும் விடயமாகவே இருந்தது.




இப்போது எனக்கு கூட பல்கலையில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கையில், அதற்கும் சில சந்தர்ப்பங்களில் அரசியல் அழுத்தங்கள் வருகின்றன. அரசியல்வாதிகளாக இருந்தால் இப்படியான அழுத்தங்களோ. உயிராபத்தோ வருகின்ற போது வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுவார்கள். ஆனால் சாதாரண ஊடகவியலாளர்கள் அப்படிச் செல்லமுடியுமா? உதயன் பத்திரிகை குழுமத்தின் நிறுவுநர் சரவணபவனும் பெரும் சவால்களுக்கு மத்தியிலேயே இதனை நடத்திக் கொண்டிருக்கின்றார்.

பொருளாதார நெருக்கடி மிகுந்த இன்றைய காலத்தில் அதில் இருந்து தப்பித்துள்ள ஒரே ஒரு மாகாணம், எங்களுடைய வடமாகாணம் மட்டுமே. ஏனெனில் எமக்கொரு தனித்துவமான பொருளாதாரக் கட்டமைப்பு இயல்பாகவே இருக்கின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடியிலும் பல்கலைக் கழகத்தில் 1200 மாணவர்களுக்கு மேல் சமுதாய சமையலறை செயல் திட்டத்தை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம். எத்தனையோ மாணவர்கள் அதில் பயன்பெறுகிறார்கள்.


இங்கே பல்வேறுபட்ட சிந்தனைகளும், கொள்கைகளும் கொண்ட அரசியல்வாதிகள் வீற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப ஒருவர் சொல்வதை இன்னொருவர் மறுதலிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொள்கைகள், பல்வேறுபட்ட சிந்தனைகள் இருக்கலாம். ஆனால் அந்தச் சிந்தனைகள் யாவும் நியாய பூர்வமானதாக இருக்கவேண்டும்.

அப்படி அந்தச் சிந்தனைகள், கொள்கைகள் நியாயபூர்வமானவையா இல்லையா என்பதை மக்களுக்குச் சொல்வதே ஊடகவியலாளர்களின் பொறுப்பாக, பத்திரிகை தர்மமாக இருக்கின்றது. ஏனைய நாடுகளில் இருப்பதைப் போல எம்மைப் பாதுகாக்க, றோ, சி.ஐ.ஏ போன்ற அமைப்புகள் இங்கில்லை. எம்மைப் பாதுகாக்க உள்ள ஒரேயொரு பொறிமுறை இந்தப் பத்திரிகை தர்மமே.

அண்மைக்காலங்களில் வெளிநாட்டு புலனாய்வு முகவர்கள் இலங்கைக்கு வந்து சென்றனர் என்றெல்லாம் செய்திகள் வெளிவருகின்றன. இங்கே ஏன் அத்தகைய வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் வருகின்றன? அவர்களுக்கான புலனாய்வுத் திரட்டல் அவர்களுக்கு அவசியம். எம்மிடமும் இயல்பாகவே புலனாய்வறிவு இருக்கத்தான் செய்கின்றது.

ஆனால் மக்களாகிய நாங்கள் எங்களுடைய ஜனநாயக உரிமையான தேர்தலை நாங்களே எதிர்கொண்டு தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு மக்களுக்கு விழிப்பூட்டக்கூடிய, புலனாய்வுச் சிந்தனையை வளர்க்கக்கூடிய, ஊடக தர்மத்தைப் பாதுகாக்கக் கூடிய பாதையில் 38 வருடங்களாகப் பயணிக்கும் உதயனுக்கும், அதன் நிறுவுநருக்கும், ஊடகவியலாளர்களுக்கும் என் வாழ்த்துக்கள் - என்றார்.

(அ-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் திசைகாட்டியாக உதயன்

## செந்தமிழ்ச் சொல்லருவி லலீசன் புகழாரம்




தமிழர்களின் உணர்வறிந்து, தமிழர்கள் பயணிக்க வேண்டிய திசையை அறிந்து அதற்கேற்ப மக்களுக்கு வழிகாட்டி, மக்களை வழிப்படுத்தி வருகின்றான் உதயன். அதனால்தான், இந்த மண் சுமந்த அத்தனை வலிகளையும் உதயனும் சுமந்தான் இவ்வாறு உதயனின் 37ஆவது ஆண்டு விழாவில் தெரிவித்தார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி லலீசன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உதயனின் ஆரம்பகால வாசகனாக இன்றுவரை தொடர்வதால்தான் எனக்கு இந்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்று நான் கருதுகின்றேன். 1985ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி நான் ஒரு பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் உதயனின் முதலாவது பதிப்பு வெளியானது. சாவகச்சேரி சந்தையில் உள்ள விற்பனை நிலையத்தில் தள்ளுண்டு, நெரியுண்டு இந்தப் பத்திரிகையை நான் பெற்றுக் கொண்டேன். முதல் நாள் பத்திரிகை என்றால் அது இன்று சாதாரணமாகி விட்டது. அன்று அவ்வாறில்லை. என்னைவிட மூத்தவர்கள் அன்று ஆர்வத்துடன் இந்தப் பத்திரிகையை வாங்கினார்கள். அந்த அனுபவம் இப்போதும் நீங்காதிருக்கின்றது. முன்பு 'இளைய தலைமுறையின் இதயம் கவர்ந்த நாளிதழ்' என்ற வாசகத்தைத்தான் உதயன் கொண்டிருந்தான். இன்று, 'மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்' என்ற வாசகத்தை உதயன் கொண்டிருக்கின்றான். இளைய தலைமுறையினரைத் தாண்டி அனைத்து மக்களுக்கும் ஏற்றவனாக உதயன் இன்று மாறியுள்ளான். இதனால்தான் இந்த மாற்றம் என்று கருதுகின்றேன்.

ஊடகங்களைப் பொறுத்தவரை அவை ஏதோவொரு சார்புநிலையில் இருக்கின்றன. ஊடகங்கள் உண்மையைத்தான் எழுதுகின்றன. ஆனால், அவை மக்களுக்குச் செய்திகளைச் சொல்லும் பாணியில் வேறுபடுகின்றன. அந்தவகையில் தமிழ் மக்களுடைய உணர்வறிந்து தமிழ் மக்களுடைய பயணத்துக்கு ஒரு மைல்கல்லாக, ஒரு திசைகாட்டியாக தன்னுடைய ஊடகப் பயணத்தை உதயன் முன்னிறுத்தியிருக்கின்றது. உதயனைப் பார்த்து தங்கள் வாழ்க்கை நிலையை அறிந்துகொண்ட மக்கள்தான் இம்மண்ணிலே வாழுகின்ற மக்கள். அதனால் இந்த மண் சுமந்த வலிகளை உதயனும் சுமந்தான்.

### எழுத்தாளர்களின் களம்

இந்த மண்ணில் சஞ்சீவி முகிழ்ந்தெழுந்த பிற்பாடு பல எழுத்தாளர்கள் அடையாளம் காணப்பட்டார்கள். பல எழுத்தாளர்களை உதயன் பிரசவித்தான். ஆனால் இன்றைக்கு ஊடகங்களால் எழுத்தாளர்களைப் பிரசவிக்க முடியாமல் இருக்கின்றது. சிற்றிதழ்கள்தான் எழுத்தாளர்களை உருவாக்குகின்றன.

தமிழர் தாயகத்திலும்சரி, புலம்பெயர் தேசத்திலும்சரி பல்லாயிரம் வாசகர்கள் உதயனைப் படிக்கின்றார்கள். அவர்களின் பிரதிநிதியாக உதயனை வாழ்த்துவதில் மிகவும் பேருவகை அடைகின்றேன். இறைவனினதும் தமிழன்னையின் ஆசியுடனும் உதயன் மேலும் செழிப்படையட்டும். நீண்டு நிலைபெறட்டும் - என்றார்.

(ம-125)

# தமிழ்த் தேசியப் பாதையில் உதயனின் பயணம் தொடரும்

## உதயன் குழுமத்தலைவர் ஆணித்தரம்




40 தடவைகள் உதயன் தாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், ஒரு தடவைகூட பொலிஸாரால் எந்தவித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஊடக சுதந்திரம் இலங்கையில் பாதுகாக்கப்படவில்லை என்பது தெரிந்த விடயம்தான். ஆனால், இந்த நிலைமை வடக்கு - கிழக்கில் இன்னும் மோசமாயிருக்கின்றது இவ்வாறு தெரிவித்தார் உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.

உதயனின் ஆண்டுவிழா நிகழ்வு, உதயன் பணிமனையில் உள்ள உதய வாசலில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உதயனுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எத்தனையோ தடவைகள் பேசியிருக்கின்றேன். எத்தனையோ அறிக்கைகளைக் கொடுத்திருக்கின்றோம். எத்தனையோ வலியுறுத்தல்களை மேற்கொண்டுள்ளோம்.

ஆனால், எந்தவொரு தடவையேனும் காத்திரமான நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. ஊடக அடக்குமுறைகள் இலங்கையில் இருக்கின்றன.

ஆனால், வடக்கு - கிழக்கில் இந்த நிலைமை இன்னும் மோசமாகவுள்ளது. உதயனுக்கு மாத்திரமல்ல. அனைத்துப் பத்திரிகைகளுக்கும் இது பொருந்தும். 2006ஆம் ஆண்டு உதயனுக்குள் கூலிப்படையை அனுப்பிச் சுட்டார்கள். ஆனால், அன்றைய ஆசிரியர் இந்தப் பத்திரிகையை விட்டு வெளியேறவில்லை. அடுத்தநாளிலும் உதயன் வெளிவந்தது. இவ்வாறு உதயனையும், தேசியத்தையும் நேசிக்கின்றவர்களாகத்தான் அன்று முதல் இன்று வரையுள்ள அனைத்து ஆசிரியர்களும் உள்ளார்கள்.

### தேசியச் சிதைப்பு

தமிழர்களின் தேசியத்தையும் அவர்களின் சுய கௌரவத்தையும் உதயன் ஆத்மாத்தமாக நேசித்தான். இதனால்தான் இத்தனை இடர்பாடுகளையும் உதயன் எதிர்கொண்டான். இனியும் உதயன் தன் தடம் மாறாத பாதையில் தொடர்ந்து பயணிப்பான்.

ஆனால், இன்று தமிழ்த் தேசியம் அதே இருப்போடும் பிடிப்போடும் இருக்கின்றதா? என்று எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். 10 வருடங்களுக்கு முன்னர் அனைவரும் தேசியத்தோடுதான் இருந்தார்கள். தற்பொழுது தேசியத்தை விடுத்து தெற்குத் தேசியக் கட்சிகளின் கொள்கைகளுக்குப் பலரும் எடுபடுகின்றார்கள். தெற்கின் தேசியக் கட்சிகள் பெருவாரியான பணத்தை இறைத்து தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியச் சிதைப்பில் ஈடுபடுகின்றன. இவ்வாறான பின்னணியில் கூடுதல் கடமையுள்ளவர்களாக நாம் இன்று காணப்படுகின்றோம்.

### டிஜிட்டல் மயம்

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் உதயனின் முதலாவது பதிப்பிலிருந்து தற்காலப் பதிப்புகள் வரை அனைத்தையும் இணையத்தில் பார்க்கலாம்.

உதயனின் அனைத்துப் பக்கங்களும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எதிர்வரும் பொங்கல் பண்டிகையிலிருந்து உதயனுக்கு கூடுதலான இலத்திரனியல் பக்கங்களை நாங்கள் வெளியிடவுள்ளோம். டிஜிட்டல் உலகத்துக்கு ஏற்ப எம்மை நாமே மாற்றிக்கொள்ள வேண்டியுமிருக்கின்றது - என்றார்.

(ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38ஆவது அகவைக்குள்...

உதயனின் 37ஆவது ஆண்டு நிறைவு விழா, உதயன் பணிமனையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. தூதரக அதிகாரிகள், தமிழ்த் தேசியக் கட்சிகயின் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள், மருத்துவர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட மேற்படி விழாவின் ஒளிப்படத் தொகுப்பு...















## நீத்தார் நயப்புரை

■ கே.எஸ்.சிவஞானராஜா



# சங்கீத சாம்ராஜ்ஜியத்தின் சிகரக் கலைஞன் கருணாகரன்

சங்கீத உலகின் தனிப்பெரும் கலைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் ஏ.கே.கருணாகரன் ஆவார். இவர், இந்தியக் கலைஞர்களோடு சமரசம் புரிந்த மனோதர்ம, ஸாகித்திய, சம்பூரணக் கலைஞன் ஆவார். மகாராஜபுரம் சந்தானம், தஞ்சாவூர் தியாகராஜன், கல்யாண கிருஷ்ண பாகவதர், ஏ.எஸ்.ராமநாதன், கல்யாணராமன், சண்முகரத்தினம், ஐயாக்கண்ணு தேசிகர், என்.கே.பத்மநாதன், நெய்வேலி சந்தான கோபாலன், சுதா ரகுநாதன் ஆகியோரின் இசையோடு திளைத்தவர். அதிசயமான அபூர்வராகங்களில் கனிரசமாம் உருப்படிகளில் கனகச்சிதமாகப் பாடி சபையைக் காத்திரமாக்கியவர். இசை விழாக்களில் இவரது இசைக்கு ஒரு தனி இரசிக விற்பன்னர்கள் மண்டபங்களைக் கைப்பற்றி இசைமொழியைச் சேமிப்பர். இலங்கையிலும், வெளிநாடுகளிலும் கொடிகட்டிப் பறந்த இவர், சுமார் 10 ஆயிரம் இசைக் கச்சேரிகளுக்குச் சொந்தக்காரராக மிளிர்கின்றார். இவரது ஸ்பெஷல் இராகம் தானம் பல்லவி [illegible] [illegible]மும் வாசம் [illegible] கருணாகரம் எனும் தம்புராவின் சுருதி ஓ[illegible]ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிய விடிய இனித்த குரல் அமைதியானதோ?
வீசும் தென்றல் காற்றுக்கூட ஊமையானதோ?
செடியும் கொடியும் கருணாகரத்தைக் கேட்க மறந்ததோ?
சொல்லித்தந்த பாடம் இனியும் மறந்து போகுமோ?

இசைவிழாக்கள் இனியும் களைகட்டுமோ?
இராகம் தானம் பல்லவி காணாது போகுமோ?
திசைகள் எல்லாம் மாறிப்போகுமோ?
திக்கற்ற இசையுலகம் துவண்டு போகுமோ?

அபூர்வராகங்கள் பாடமறந்து இனியும் தூங்குமோ?
ஆழமான தர்மம்காக்க யாரினி வருவானோ?
சபாஷ் என்று பாட ஒரு தலைவன் இல்லையோ?
சாந்தி பெற்று எழுந்து வாராய் சங்கீதம் வாழவே

கண்ணீரில் கரைந்த சுருதி இங்கே காலமானதோ?
கர்நாடக சங்கீகம் இன்று களையிழந்ததோ?
தெண்ணிலா கூட தேய்ந்து ஒளியிழந்ததோ?
தேசியக்கலைஞன் தேவராகப் பயணம் கொண்டாரோ?

## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய [illegible] :**
புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :
**puthanpoigai@gm[illegible]l.com**

## சதொசவில்...

கிறிஸ்மஸ் உள்ளிட்ட பண்டிகை காலத்தை முன்னிட்டு 5 அத்தியாவசியப் பொருள்களின் விலையை இன்று முதல் குறைக்கத் சதொச தீர்மானித்துள்ளது. பெரிய வெங்காயம் 5 ரூபா குறைக்கப்பட்டு 185 ரூபாவாகவும், சிவப்பு பருப்பு 7 ரூபா குறைக்கப்பட்டு 378 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும். ரின் மீன் 10 ரூபா குறைக்கப்பட்டு 480 ரூபாவாகவும் சிவப்பு மிளகாய் 15 ரூபா குறைக்கப்பட்டு ஆயிரத்து 780 ரூபாவாகவும் நெத்தலி கருவாடு 50 ரூபாவால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும். (அ–ஒ–இ)


## உடனடி சேவை

A/C, Fridge, Washing Machine, Air Cooler, Water heater தரமான உதிரிப் பாகங்களுடன் Spot Service

தொடர்பு: 076 034 0301 (CR.38809) (3/6)


## ஆகாஷன் ஞாபகார்த்த மேசைப் பந்தாட்டப் போட்டி - 2022

- இடம் : யாழ். மத்திய கல்லூரி
- காலம்: 23.12.2022 (பெண்கள்)
  24.12.2022 (ஆண்கள்)
- நேரம் : மு.ப.8.00 மணி
- வயதுப்பிரிவு : ஆண்கள் / பெண்கள்
  (7,9,11,13,15,17,19 வயதின் கீழ் திறந்த போட்டி)
  40 வயதிற்கு மேற்பட்டோர் போட்டி.

(cs.48229) (2.6)

செயலாளர்,
வடக்கு மாகாண மேசைப் பந்தாட்ட சங்கம்
தொடர்பு: 077 922 7887, 077 615 8117

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலக ஆளுகைக்கு உட்பட்ட 10ம், 12ம் வட்டாரங்களின் ஆதனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாதனங்களின் மீள் வரிமதிப்பீட்டு நிரலானது மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. வரியிறுப்பாளர்கள் 30.12.2022 ம் திகதிவரை அலுவலகத்தில் தமது வரி மீள் மதிப்பீட்டு நிரலினை பரிசோதிக்கலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(cs 48229) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 10 . 1952



மறைவு
20 . 12 . 2022

### திருமதி பாலசிங்கம் லோகநாயகி

குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் லோகநாயகி நேற்று (20.12.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பாலசிங்கம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகம் ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா தில்லைவனம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சம்பந்தன், லீலாவதி, வைத்தீஸ்வரன் மற்றும் சதானந்ததேவியின் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான், (cs.22320) (2.6)

தகவல்: ஞானகணேசன்
077 443 0490, 077 371 0754

## மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 01 . 1971



இறப்பு
20 . 12 . 2022

### அருளானந்தம் அரவிந் (அரவிந்தன்)

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் அரவிந்தன் நேற்று (20.12.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/6, மீனாட்சி அம்மன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்
(பண்ணை ஆஸ்பத்திரி அருகில்) (cs.22318) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
077 820 9842

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் 2023 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப்பெறுமதியின் 10% ஆன வரியொன்றினை 2023ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30 மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

02. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03. மேற்சொல்லப்பட்ட பந்தி - 1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாத விடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15% உம் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.

04. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2023 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

05. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2023 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம், வியாபார வரிக்கட்டணங்களை செலுத்தி 31.03.2023 காலப்பகுதிக்குள் உரிமம், பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாத, வியாபார வரி செலுத்தாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

06. 2023 ஆம் ஆண்டிற்கான விளம்பர கட்டணங்களை செலுத்தி விளம்பரங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்கள் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் நகரசபையினால் அகற்றப்படும்.

07. 2023 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி கட்டணங்களை செலுத்தி உரிமத்தகடுகளை பெற்றுக்கொள்ளுமாறும், வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

08. ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச்சொந்தக்காரர்கள் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபையில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

09. நகரசபை எல்லைக்கு உட்பட்ட தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர், குழாய்க் கிணறுகள் அமைப்பதாயின் அனுமதி பெற்று அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடத்தினை புனரமைப்பதாயின் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நகரசபையுடன் தொடர்பு கொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.

10. நகரசபைக்குட்பட்ட நிலங்கள் பிரிக்கப்படும் போதோ அல்லது ஒன்றிணைக்கும் போதோ நகரசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். பிரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட நிலத்தின் நில அளவைப்படத்திற்கான பிரிவிடல் அனுமதி பெறப்பட்டு அமைவுச்சான்றிதழ் பெற்றபின்னரே குறித்த ஆதனத்தில் அபிவிருத்தி வேலைகளோ விற்பனை செயற்பாட்டினையோ மேற்கொள்ள முடியும்.

11. தொழில் வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000 ஆம் ஆண்டு 22 ஆம் திகதி 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. பொது மக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை நகர சபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்.

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.
20.12.2022

CR.38808 (2.6)

சிவமங்கை இராமநாதன்,
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை கலைஞர் மறைவு!



யாழ்., டிசெ. 21

ஈழத்தின் புகழ்பூத்த சின்னமணி வில்லிசைக் குழுவின் நகைச்சுவைக் கலைஞரும், அச்சுவேலி தபால் அலுவலக முன்னாள் அலுவலரு மான அச்சு வேலியூர் அம்பி காபதி விஜயநாதன் நேற்று செவ் வாய்க்கிழமை உயிரிழந்தார். இவர், அழிந்து வரும் தமிழர்களின் தொட்டுணர முடியாத மரபுரிமைக ளுள் ஒன்றான வில்லிசைக் கலையை நிலைநிறுத்திய கலைஞர்களுள் சின்னக் கலை வாணர் சின்னமணியு டன் இணைந்து ஈழத்திலும் புலம்பெயர் தேசத்திலும் பல அரங்கு கள் மூலமாக மக்களின் மனம் கவர்ந்த கலைஞராகத் திகழ்ந்தார். அம்பிகாபதி விஜயநாதன் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரங்குகள் ஏறியுள்ளார் என்பதும் குறிப்பி டத்தக்கது.

(ம-14-125)


## பணியாளர் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள வியாபார நிறுவனம் ஒன்றிற்கு கணினி அனுபவமுள்ள பெண் பணியாளர் தேவை.

தொடர்பு: 077 869 5341, 076 822 7546

(cr 21537)(2.6)

## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள்தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப்பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 077 706 7698

(CR 38810)(3/6)


## சேவைநலன் பாராட்டு

**திருமதி மங்களேஸ்வரி தேவராசா**

**(அதிபர்)**

**(யா/தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாசாலை, காரைநகர். காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் சுப்பையாவின் மகள், கிளுவனை, களபூமி, காரைநகர்.)**



31.12.2022 அன்று தனது 61 ஆவது அகவையில் ஓய்வு பெறும் அதிபர் திருமதி மங்களேஸ்வரி தேவராசா அவர்களின் அர்ப்பணிப்பான கல்வித்துறை சேவையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல எங்கள் குல தெய்வமான ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமியின் (கேசடை) அருளாசியை வேண்டி நிற்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
**சகோதரர்கள்**

## வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி வீதிக்கு பெயரிடல்

வவுனியா வடக்கு பிரதேசசபையின் கீழ் உள்ள நெடுங்கேணி கிராமத்தின் **"பொது நோக்கு மண்டப வீதியை"** மக்களின் வேண்டுகோளிற்கிணங்க 30.11.2022 ஆம் திகதிய VNPS/2022/GM/11/56/09 ஆம் இலக்க சபை தீர்மானம் மூலம் **"தம்பிமுத்து வீதி"** என பெயர் மாற்றம் செய்வதற்கு சபை தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இப் பெயர் மாற்றம் தொடர்பில் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் **"தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, முல்லைவீதி, நெடுங்கேணி என்ற முகவரிக்கு 07 வேலை நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரியப்படுத்தவும்.** ஆட்சே பனைகள் எவையும் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் **"தம்பிமுத்து வீதி"** என பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதனை தெரியப்படுத்துகின்றோம்.

**த.பார்த்தீபன்,**
**கௌரவ தவிசாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.** (cr.38807) (2.6)


**சைவ மன்றம்**
சிட்னி முருகன் கோயில்
தமிழ் கல்வி கலாச்சார நிலையம்

**The Saiva Manram**
Sydney Murugan Temple
Tamil Educational & Cultural Centre

## அவுஸ்திரேலியாவில், சைவமன்றத்தில் வேலை வாய்ப்பு

## மடப்பள்ளி ஐயர் / உதவி அர்ச்சகர்

**(நைவேத்தியம், பிரசாதம் செய்தல் மற்றும் கோயிற்பணி புரிதல்)**

அவுஸ்திரேலியாவில், சைவமன்றத்தினால் நிர்வகிக்கப்படும் சிட்னி முருகன் கோயிலில், பிரதானமாக மடப்பள்ளி ஐயராகவும் ஏனய நேரத்தில் உதவி அர்ச்சகராகவும் பணி செய்வதற்கு ஓர் ஐயரை நியமிப் பதற்கு மன்றம் தீர்மானித்துள்ளது

தேர்ந்தெடுக்கப்படுபவர், சுவாமிக்குரிய நைவேத்தியமும் அடியார்கள் பூசையில் படைப்பதற்குக் கேட்கும் பிரசாதங்களையும் செய்தல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட நேரங்களில் கோயிலில் உதவி அர்ச்சகராகவும் பணியாற்ற வேண்டும். தொடக்கத்தில் இரு வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை வழங்கப்படும்.

**தகுதி :**

- ஏற்கனவே பிரசாதங்கள் கோயிலில் செய்த அனுபவம். (பொங்கல், புளிச்சாதம், வடை, மோதகம் முதலியன)
- உதவி அர்ச்சகராக பணியாற்றுவதற்கு பயிற்சி பெற்றிருத்தல்.
- உதவி அர்ச்சகராக பணியாற்றிய அனுபவம்.
- லட்டு போன்ற இனிப்புகள் செய்த அனுபவம் விரும்பத்தக்கது.
- பூமாலை கட்டுவதற்குத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

**விண்ணப்ப நிறைவு நாள்: 30.12.2022.**
**விண்ணப்பம் அனுப்புவதற்குரிய விபரம்:**

**த. ஞானரட்ணம்**
**சைவமன்ற செயலாளர்**
**Email: Secretary@sydneymurugan.org.au**
**மேலதிக விபரங்களுக்கு:**
**ச.சபானந்தன் +61 405 147 679**

(CS 47981) (3/6)


## மரண அறிவித்தல்

மலர்வு
11 . 11 . 1948



உதிர்வு
20 . 12 . 2022

## திருமதி பாலயோகேஸ்வரி நடராசா

பன்னாலை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலயோகேஸ்வரி நடராசா நேற்று (20.12.2022) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் நவரட்ணம் நடராசாவின் (இளைப்பாறிய தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா செல்வநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கலாநிதி முகுந்தன் (லண்டன்), வைகுந்தன் (பிரதி முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி - காரைநகர்), நிதர்சினி (USA) ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்மிளா (லண்டன்), வனிதா (யாழ். பிரதேச செயலகம்), நாதசொரூபன் (USA) ஆகியோரின் மாமியாரும், தனபாலன் (அவுஸ்திரேலியா), சிவபாலன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலசிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜிகானியா, வெதேஷ், மேனுஷா, மகிசியா, நிதின், ஷகீபன், போஜிராம், கவியுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பன்னாலை, தெல்லிப்பழை.**

தகவல்:
**ந.நடராசா (கணவர்)**

(CR 38815) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் பகிரங்க அறிவித்தல்

1917ம் ஆண்டின் 9ம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத் தப்பட்டவாறு) 112ம் பிரிவின் கீழ் ஒப்படைத்தற் கட்டளை ஒன்றை கோரி செய்யப்படும் விண்ணப்பம்.

சின்னத்துரை குலபாலசிங்கம்
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி

மனுதாரர்

**வழக்கு இல நம்பிக்கைச் சொத்து / 37 / 2022**

மேற்படி வழக்கில் மேலே பெயர் குறித்த மனுதாரர் அச்சுவேலி, அச்சுவேலி வடக்கில் அமைந்துள்ள இராஜபண்டித முதலியார் பூதர் மடத்திற்கு 2019.10.16ந் திகதி பிர சித்த நொத்தாரிசு S. சிவனேசன் முகதாவில் நிறைவேறிய 3208ம் இலக்க தர்மகர்த்தா நியமன உறுதி மூலம் தர்மகர்த்தாவாக அவ்வுறுதியின் திகதியி லிருந்து நியமனமாகி தற்போது குறித்த மடத்தின் தர்மகர்த்தாவாகவும் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டுவரும் நிலையிலும் குறித்த மடத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற வகையில் அம் மடமாகிய நம்பிக்கைப் பொறுப்பின் பயனாளி களின் நலனுக்கென அம் மடத்தின் பயனுக்காக விடப்பட்டுள்ள கீழக் காணும் பட்டியலில் குறிப்பிடப்படும் அசையாச் சொத்துக்கள் யாவற்றையும் மனுதார் தமது உடைமை, கட்டுப்பாடு, கட்டுக் காப்பு முகாமைத்துவம், கையாளுகை ஆகியவற்றை அம் மடத்தினை நிர்வகிப்ப தற்கென தம்வசம் வைத்திருக்க வேண்டிய தேவை எழுந்துள்ள நிலையில்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மேற்குறித்த வழக்கைத் தாக்கல் செய்து குறித்த பட்டியலிலுள்ள அசையாச் சொத்துக்கள் யாவற்றையும் குறித்த மடத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற வகையில் தம்மிடம் ஒப்படைக்கும் கட்டளை யொன்றைக் கோரி விண்ணப்பித்துள்ள நிலையில் மன்று குறித்த விண்ணப்பம் தொடர்பில் எவராயினும் நபருக்கு / நபர்களுக்கு கோரப்படும் ஒப்படைத்தற் கட்டளையை மனுதாருக்கு வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை / ஆட்சேபனைகள் உள்ளதா என்பதை அறி வதற்கென பத்திரிகைப் பிரசுரமொன்றை செய்யுமாறு பணித்து கட்டளையிட்டுள்ள நிலையில்

மனுதாரின் குறித்த விண்ணப்பம் தொடர்பில் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது.

எனவே மனுதார் கோரும் குறித்த ஒப்படைத்தற் கட்டளைக்கு ஆட்சேபனை அல்லது ஆட்சேபனைகள் தெரிவிக்க விரும்புவோர் 2023: 01.12 ந் திகதியன்று தாமாகவோ தமது சட்டத்தரணி மூலமாகவோ தோன்றி தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.

**2022ம் ஆண்டு மார்கழி மாதம் 15ந் திகதி**

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
**மல்லாகம்**

**இராஜபண்டிதமுதலியார் பூதர் மடப் புண்ணியத்திற்குரிய அசையா சொத்துக்களின்பட்டியல்**

01. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி, வலிகாமக் கிழக்கு பிரதேச செயலர் பிரிவு கோப்பாய், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை J/285 அச்சுவேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவு, அச்சுவேலி கோவிற் பற்று, அச்சுவேலி வடக்கிறை "குஞ்சு முந்திரிகைப்புலம்" நி.ப 10 1/8 கேணி கிணறும், மடம் வான்பயிர் செய்பயிர்களும் இந்த நிலப்பரப்பு 10 1/8 ற்கும் எல்லைகள்

கிழக்கு : மடப் புண்ணியத்திற்குரிய ஆதனம்
வடக்கு : நாகலிங்கம் பெண் பொன்னுவிற்கும் பங்காளருக்குமுரியஆதனம்.
மேற்கு : பண்டாரி கந்தனின் ஆதனம்.
தெற்கு : பண்டாரி சூரியரின் ஆதனம்.
இவ் எல்லைப்படி இதடங்கலும்.

02. மேற்படி இறை "குஞ்சு முந்திரிகைப்புலம் " நெற்பரப்பு 5 1/2 இதற்கு எல்லைகள்

கிழக்கு : கந்தன் பொன்னுத்துரைக்குரிய ஆதனம்
வடக்கு : கிட்டினர் பெண் செல்லாச்சிக்குரிய ஆதனம்.
மேற்கு : ஒழுங்கை ஆதனம்.
தெற்கு : வீதி
இவ் எல்லைப்படி இதடங்கலும்.

03. மேற்படி இறை "முந்திரிகைப்புலம்" நி.பரப்பு 4 குளி 2 இதற்கு எல்லைகள்

கிழக்கு : கந்தன் பொன்னுத்துரைக்குரிய ஆதனம்
வடக்கு : சரவணன் பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம்.
மேற்கு : மிகுதி ஆதனம். (முன் உறுதிப்படி)
தெற்கு : சின்னத்தம்பி பொன்னையாவின் ஆதனம்.
இவ் எல்லைப்படி இதடங்கலும்.

04. மேற்படி இறை "காட்டு ஊரியான் வயல்" நெற்பரப்பு 26 இதற்கு எல்லைகள்

கிழக்கு : பொன்னன் கோவிந்தனுக்குரிய ஆதனம்
வடக்கு : வீதி.
மேற்கு : இராமன் சரவணைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்
தெற்கு : கந்தன் சின்னக்குட்டிக்குரிய ஆதனம்.
இவ் எல்லைப்படி இதடங்கலும்.

05. மேற்படி இறை "காட்டு ஊரியான் வயல்" நெற்பரப்பு 2 இதற்கு எல்லைகள்

கிழக்கு : ஆழ்வான் கிட்டினனுக்குரிய ஆதனம்
வடக்கு : மாதன் கோணனுக்குரிய ஆதனம்.
மேற்கு : சபாபதி வரதராசாவிற்குரிய ஆதனம்
தெற்கு : வீதி
இவ் எல்லைப்படி இதடங்கலும்.

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
**மல்லாகம்**

**வரைவு**
**கனகசிங்கம்**
**மனுராரின் கூட்டத்தரணி**

(CS 48235)(3/6)


யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் .....

இம் மாதம் 16 ஆம் திகதி முதல்

நத்தார் மற்றும் புதுவருட

ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்

திருமண பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
டொப், புரோக்
மற்றும் ஏராளமான
ஆடைத் தெரிவுகள்



நெற் சல்வார், கொட்டன் சல்வார்

~~5000~~/= 2000/=

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

இந்தியன் செலக்ஷன்

காலம் : 16.12.2022 முதல் 31.12.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


# சேவை நலன் பாராட்டு



**திருமதி மங்களேஸ்வரி தேவராசா (அதிபர்)**

யா/ தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை, காரைநகர்
(காலஞ்சென்ற ஓய்வுபெற்ற அதிபர் திரு.க.சுப்பையாவின் மகள்,
கிளுவனை, களபூமி, காரைநகர்.)

**31.12.2022** அன்று தனது **61 ஆவது** அகவையில் ஓய்வு பெறும் எமது வித்தியாலய அதிபர் **திருமதி மங்களேஸ்வரி தேவராசா** அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுகாலம் சிறக்கவும் மனதார வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்:

| | |
|---|---|
| 1989.11.28 - 1991.02.04 | யா/தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை (ஆசிரியர்) |
| 1991.02.05 - 1993.01.03 | ஆசிரிய பயிற்சிக் கலாசாலை |
| 1993.01.04 - 1998.01.18 | யா/ இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் (ஆசிரியர்) |
| 1998.01.19 - 2001.12.31 | யா/சென்ற் ஆன்ஸ் றோ.க.பா. மானிப்பாய் (ஆசிரியர்) |
| 2002.01.01 - 2002.12.31 | யா/ கல்மடு படிவம் 1 அ.த.க.பா. (ஆசிரியர்) |
| 2003.01.01 - 2010.12.31 | யா/ வியாவில் சைவ வித்தியாலயம் (ஆசிரியர்) |
| 2011.01.01 - 2022.12.31 | யா/தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை (அதிபர்) |

*வாழ்த்துவோர்.*


பாடசாலைச் சமூகம்

யா/ தோப்புக்காடுமறைஞான சம்பந்த வித்தியாசாலை

(CS 48240)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 - 12 - 1949

மறைவு 20 - 12 - 2022

## திரு. வெற்றிவேலு கருணநாதன்
## (ஆனந்தன்)

### (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் – மிருசுவில் வடக்கு)

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேலு கருணநாதன் நேற்று (20.12.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீவரட்ணம் - இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், சத்தியரூபவதியின் அன்புக் கணவரும், ஆதிபரன், அருள்குமரன், அபிராமி, இளங்குமரன், செந்தில்குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜிதா, நிசாந்தினி, தினேஸ்கரன் ஆகியோரின் மாமனாரும், சுவராகினி, சாகித்யன், அஜிக்ஷா, அனன்யா ஆகியோரின் பேரனும், சிவானந்தசோதி, காலஞ்சென்ற லீலாவதி மற்றும் தயாவதி, பிரபானந்தன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் உசன் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு உசன் ஈச்சங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் : 077 386 7688**
**122/13, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 48241) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்சுழற்சி நிலையங்களால் வடக்கை மேம்படுத்துவோம்

## பிரதம செயலர் அழைப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 21

வடமாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள்கள் மீள்சுழற்சி நிலையத்தை மக்கள் உரிய முறையில் பேணினால் விரைவில் சுத்தமான சூழலை உருவாக்கலாம் என்று வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட கண்ணாடிப்பிட்டி பகுதியில் வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தால் மூன்று கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ மீள்சுழற்சி நிலையத்தை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் இந்தத் திட்டம் நாட்டில் வத்தளை பிரதேசசபை, ஜா எல பிரதேசசபை மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நான் பிரதம செயலாளர் பதவியைப் பொறுப்பேற்க வந்த வேளை வீதியின் இருமருங்கிலும் பெருமளவு கழிவுப் பொருள்களை காணமுடிந்தது.

இவற்றை அப்புறப்படுத்த முயற்சிகள் எடுத்து வரும் நிலையில் இவ்வாறான நிலையத்தை வேள்ட் விஷன் நிறுவனம் அமைத்துள்ளது பாராட்டத்தக்கது.

மாகாணத்தில் காணப்படும் கழிவுகளை மீள்சுழற்சி நிலையத்தின் மூலம் அகற்றுவதால் அனைத்து இடங்களிலும் தற்போது காணப்படும் டெங்கு நோயை முற்றாக இல்லாமல் செய்யமுடியும்.

இந்தத் திட்டத்தின் மூலம் விரைவில் கிராமங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பழைமையான பொருள்களை தூக்கி வீசும் பழக்கமுடைய நாம் இவ்வாறான நிலையத்தை முழுமையாகப் பயன்படுத்தி தூய்மையான பிரதேசங்களை உருவாக்குவோம்- என்றார். (ம-14,9)

# தென்மராட்சி சமுர்த்தி அலகால் வீடமைப்புக்கான கொடுப்பனவு!

சாவகச்சேரி, டிசெ. 21

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளர்களுக்கு வீடமைப்புத் திட்டத்துக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அதன்படி பிரதேசத்தில் நிரந்தர வீட்டு வசதி இல்லாத மூன்று குடும்பங்களுக்கு தலா 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும், வீட்டு வேலைகள் பூர்த்தி செய்யாத நிலையில் காணப்படும் மூன்று குடும்பங்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும், கதவுகள், நிலைகள் முன் இணைப்புகள் பொருத்தாத மூன்று குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளன. (ச-9)

## 10 மணிநேர...

நாட்டில் 10 மணி நேர மின்வெட்டு ஜனவரியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அதனால் நாடுசெயலிழக்கக் கூடும் என்றும் இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர்கள் சங்கத் தலைவர் நிஹால் வீரரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நாட்டின் நிலக்கரிகையிருப்பு தீர்ந்துவிடும் என்றும் அதன்பின்னர், நுரைச்சோலை லக்விஜய அனல்மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி அலகுகள் மூடப்படும் என்பதாலேயே மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை- நிலக்கரிகளை ஏற்றிய கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (21.11.2022) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் திருமதி**

**கந்தசாமி சிரோன்மணி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 19.12.2022 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.12.2022) புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

**குடும்பத்தினர்.**
**077 1822 183**



## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் உறுப்பினர் வைத்திய கலாநிதி திருமதி விஜிதா விபுஷன் அவர்களின் அன்புத் தந்தை

**வைத்திய கலாநிதி**

**இரத்தினசபாபதி பொன்னையா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (CS 48243) (3/6)

**வடமாகாண**
**ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்.**



## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 11 . 1946 — மறைவு 20 . 12 . 2022

**நாகலிங்கம் குலசிங்கம்**

சீமா வளவு அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குலசிங்கம் அவர்கள் நேற்று (20.12.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லாட்சி தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற வசந்தாதேவியின் அன்புக் கணவரும் மற்றும் இராசலட்சுமியின் அன்புச் சகோதரரும், விஜஜா. அகிலன். விஜிதா. மாதவன். திலீபன். ஆகியோரின் பாசமிகு தந்தையும்., ரதன்; விஜித்தா. லிங்கேஸ்வரன். மோகனப்பிரியா. லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும். றக்ஷா றிஷி. ருலக்சன். எழில்வதனன். கஜிந்தன். கனிஸ்கா. கரிஸ். கஜசாங்கவி. ஹரிணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2022) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூத்வுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீமா வளவு,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
0771922487

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 02 . 1952 — மறைவு 18 . 12 . 2022

**பொன்னையா பாலேந்திரன் (IKP)**

காரைநகர், பாலாவோடை, களபூமியைப் பிறப்பிடமாகவும், கலவெல மற்றும் இல. 33, அரசடி லேன், K.K.S.வீதி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் கலவெல பொன்னையா பாலேந்திரன் அவர்கள் கடந்த (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வெள்ளவத்தையில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா அன்னம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற இராமுப்பிள்ளை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராவதி அவர்களின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன், கனகேஸ்வரன், பிரதீபன், லிங்கப்பிரியா, தனுப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவறங்கன், கலாயினி, வானதி ஆகியோரின் அன்பு மாமனாரும், கேஜீதன், கிர்த்திக், அஜன், ஆர்த்திக் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம்; தனலட்சுமி மற்றும் புவனேஸ்வரி, சரஸ்வதி, இராஜேஸ்வரி, இராசமலர், காலஞ்சென்ற சந்திரமலர் மற்றும் சறோஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நல்லபிள்ளை, காலஞ்சென்றவர்களான நவரத்தினம், சரவணபெருமாள் மற்றும் செந்தில்நாதன், முருகானந்தன், காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரன், நடராசா மற்றும் பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரி. இராசபூபதி, மகேஸ்வரி, உதயலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 7.00 மணியளவில் காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரியா (மகள்) - +94 775 451 358
கேதீஸ்வரன் (மகன்) - +44 795 602 5463
கனகேஸ்வரன் (மகன்) - +44 795 061 9392
பிரதீபன் (மகன்) - +44 777 101 0676

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 38806) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழிலனை முற்படுத்தும் விவகாரம்; தங்களுக்கு எதுவும் தெரியாதாம்

## கோத்தா, பொன்சேகா கைவிரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21

இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனை முற்படுத்தவேண்டும் அல்லது அவருக்குஎன்ன நடந்தது என்பதைத் தெரிவிக்கவேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவு தொடர்பில் தாங்கள் எதையும் அறியவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தபயவும், முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவும் தெரிவித்துள்ளனர்.

'நான் தற்போது முன்னாள் ஜனாதிபதி. அதேவேளை, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர். தங்கள் கேள்விக்கு (எழிலன் தொடர்பான நீதிமன்ற உத்தரவு) பதிலளிக்கக்கூடிய நிலைமையில் நான் தற்போது இல்லை. எனினும், நீதிமன்றத்தின் இந்த உத்தரவு தொடர்பில் நான் இன்னமும் அறியவில்லை. எனவே, அறியாத விடயத்துக்குப் பதிலளிக்க நான் விரும்பவில்லை' என்று கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

அதேபோன்று இந்த உத்தரவு தொடர்பில் இன்னமும் அறியவில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்சேகா தெரிவித்தார்.

இதேவேளை- இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இராணுவத்திடம் எழிலன் சரணடைந்திருந்தால் அல்லது எழிலனை அவரது குடும்பத்தினர் இராணுவத்திடம் ஒப்படைந்திருந்தால் அல்லது அவரை இராணுவத்தினர் கைது செய்திருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பதை இராணுவத்தினர் தெரிவிக்கவேண்டும். அது அவர்களின் கடமை. அதேவேளை, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அல்லது சரணடைந்திருந்த பின்னர் அல்லது கைது செய்யப்பட்ட பின்னர் எழிலன் காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டியதும் இராணுவத்தினரின் கடமைப்பாடு. அது தொடர்பில் போதிய விளக்கத்தை இராணுவத்தினர் நீதிமன்றத்திடம் முன்வைக்க வேண்டும். அந்தக் கடமையிலிருந்து இராணுவத்தினர் ஒருபோதும் விலக முடியாது' - என்றார். (அ-ஓ-5-22)

## புதுக்குடியிருப்பில்

# ஆடைத்தொழிற்சாலையின் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள்

முல்லைத்தீவு, டிசெ. 21

புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ள தனியார் ஆடைத்தொழிற்சாலையில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஏற்பட்ட தீப்பரவல் ஊழியர்களின் முயற்சியின் பயனாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீ ஏற்பட்ட வேளையில் சுமார் ஆயிரம் பணியாளர்கள் கடமையில் ஈடுபட்டிருந்துள்ளனர்.

இதன்போது மின்சாரம் தாக்கியதில் பணியாளர் ஒருவரும் சம்பவத்தைக் கண்டு மயக்கமடைந்த யுவதிகள் இருவரும் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் யுவதிகள் இருவரும் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பினர்.

தீப்பரவல் ஏற்பட்டதும் பணியாளர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு வீடுகளுக்கு சென்றுள்ளனர். கிளிநொச்சியிலிருந்து தீயணைப்பு படையினரும் அழைக்கப்பட்டு தீ முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

### போதைப்பொருள்...

கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் செயலணியின் கீழ் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரிக்கும் விடயம் தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அதனைத் தடுப்பதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

போதைப் பொருளுக்கு அடிமையாகி தற்போது சிறைச்சாலைகளில் உள்ளவர்கள் குறித்தும் அவர்களது எதிர்கால நடவடிக்கைகள், சிகிச்சைகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. (அ-ஓ-இ)

### வடக்கு...

86 தங்கம், 59 வெள்ளி, 38 வெண்கலம் உள்ளடங்கலாக 183 பதக்கங்களைப் பெற்று யாழ்ப்பாண மாவட்டம் முதலாம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் 42 தங்கம், 39 வெள்ளி, 42 வெண்கலப் பதக்கங்களுமாக மொத்தமாக 123 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மன்னார் மாவட்டம் 19 தங்கம், 16 வெள்ளி, 20 வெண்கலப் பதக்கங்களுடன் 55 பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடத்தையும், வவுனியா மாவட்டம் 19 தங்கம், 12 வெள்ளி, 17 வெண்கலம் என 48 பதக்கங்களுடன் நான்காம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்டம் 14 தங்கம், 22 வெள்ளி, 30 வெண்கலம் என்று 66 பதக்கங்களைப் பெற்று 5ஆம் இடத்தையும் பெற்றுள்ளன. (அ-ஓ-125)

### பல...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்கழகத்தால், யாழ். மாவட்டத்தினுடைய நன்னீர் பிரச்சினையும் நன்னீர் பாதுகாப்பு முகாமைத்துவமும் எனும் கருத்தமர்வில் நேற்று கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான கிணறுகள் காணப்படுகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக தாராளமாக தடையின்றி குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படுகின்றன. 200 அடி சுற்று வட்டத்தில் ஒரு குழாய் கிணறு மாத்திரமே அமைக்கமுடியும். ஆனால், இங்கு அந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. குழாய்க் கிணறுகள் ஊடாக உவர்நீர் உள்ளெடுக்கப்படும்பெரும் அபாயம் காணப்படுகின்றது. முன்னைய காலங்களில் மழை நீர் வீட்டுக் காணிகளுக்குள் நிற்கும் நிலைமை இருந்தது. இப்போது அவ்வாறில்லை. அதனை வெளியேற்றுகின்றனர். வீட்டிலே மழை நீர் சேகரிக்கும் தொட்டி அமைப்பதாகக் கூறி பிரதேசசபையிடம் அனுமதி பெற்றுக் கொள்ளப்படும். ஆனால், மழை நீர் சேகரிக்கும் தொட்டியை அமைக்கமாட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை கட்டணம் செலுத்திப் பெற்றுப் பயன்படுத்துகின்றனர். எங்களது வீட்டுக் கிணற்று நீர் குடிதண்ணீர் பாவனைக்கு உகந்ததா என்பதை நாங்களே, நீர்வளச் சபை ஊடாகப்பரிசோதனை செய்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் 19 மில்லியன் கியூபிக் மீற்றர் நன்னீர் இருப்பு மக்கள் பாவனைக்குத் தேவைப்படுகின்றது. 150 மில்லியன் கியூபிக் மீற்றர் விவசாயத்துக்குத் தேவைப்படுகின்றது. ஆனால், இங்கு கிடைக்கின்ற நன்னீரில் - மழை நீரில் நூற்றுக்கு 85 சதவீதம் கடலுக்கே செல்கின்றது. 15 சதவீதத்தையே தேக்க முடிகின்றது. ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில் 60 சதவீதத்தை தேக்குகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மழை நீரை சேகரிக்கும் 70 குளங்கள் வரையில் இப்போது காணாமற்போயுள்ளன. அவற்றின் மேல் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மக்கள் தொகைப் பெருகும்போது, சுத்தமான குடிதண்ணீரை வேறு இடங்களிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால், விவசாயத்துக்கு என்ன செய்ய முடியும்?

இதனால்தான் போரின் பின்னர் எமது குடாநாட்டின் நீரேரிகளை, நன்னீரேரிகளாக மாற்றும் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம், அதில் வெற்றியும் அடைந்து வருகின்றோம். இன்று குடாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள நன்னீரேரிகள் ஊடாக எமது குடாநாட்டின் உவர்நீர் செறிவை குறைவடையச் செய்துள்ளோம். 2015 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தரவுகளுடன் இந்த ஆண்டு எடுக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாக வைத்தே நான் இதனைக் குறிப்பிடுகின்றேன். எமது கரையோரப் பிரதேசங்களில் - நன்னீரேரிகளுக்கு அண்மையில் பல கிணறுகள் உவர்நீரிலிருந்து நன்னீராகியுள்ளன.

மழை காலங்களில் கிடைக்கும் நீரை நாம் நன்னீரேரிகள் ஊடாக தேக்கி வைப்பதற்கு முயலும்போது விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். தமது வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்குவதாகக் கூறுகின்றனர்.

எமது நீரேரியின் நீர் மட்டங்களைவிட கடல் நீர் மட்டம் உயர்வாகவே காணப்படுகின்றது. எனவே நாம் நீரேரிகளின் கதவுகளை திறந்தால், கடல் நீர் உட்புகும் அபாயம் காணப்படுகின்றது. நாம் நன்னீரேரிகளை அமைத்ததன் நோக்கத்தையே சிதைத்துவிடும் - என்றார். (அ-ஓ-125)

### பகிடிவதைக்...

டிருப்பதுடன் விடுதிகளிலிருந்து வெளியேறுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த 2 மாணவர்களுக்கும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கும் விடுதிகளில் தங்கியிருப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருப்பதுடன் உடனடியாக விடுதியிலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேநேரம், சேர்.பொன்.இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக்கலைகள் பீடத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் மீதான விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து அவர்களுக்கும் வகுப்புத் தடை உட்பட அனைத்துச் செயற்பாடுகளுக்குமான தடை விதிக்கப்படலாம் என அறியவருகின்றது. (அ-ஓ-5)

### தேடுவதோ...

பெட்டிகளைக் கொண்ட பைகள் மாத்திரமே காணக்கிடைக்கின்றது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

போதைப்பொருள் வியாபாரம் செய்யும் பெரும் புள்ளிகளை கைது செய்யாமல், சரியான ஊட்டச்சத்துகூட இல்லாத பாடசாலை மாணவர்களின் பைகளை சோதனை செய்வது வேடிக்கையானது எனவும் தெரிவித்தார்.

ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பேருந்து வண்டியொன்றை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு நேற்று அன்பளிப்பாக வழங்கி வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து, பெற்றோருக்கு உணவளிக்க வழியில்லாத நிலையில், பாடசாலை பைகளை பரிசோதிப்பதை விடுத்து, அவர்களுக்குச் சரியான போஷாக்கை அளிக்கும் திட்டத்தை தயாரிப்பதே அரசாங்கத்தின் பணியாக இருக்கவேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்நாட்டில் உள்ள 43 இலட்சம் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் பாடசாலை காலத்தில் போஷாக்கான உணவுவேளையொன்று வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

காலங்காலமாக, நம் நாட்டில் ஒரு மனப்பாட கல்வி முறையே உள்ளதாகவும், நம் நாட்டுக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் கல்வி முறையொன்றே தேவைப்படுவதாகவும், சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (அ-ஓ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை எதிர்கொள்ள பெரமுன கட்சி தயாராம்

### சந்திரசேன எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 21

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயாராகிவிட்டது. அதனால் தேர்தலை ஒத்திவைப்பதற்கு முயற்சி என குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. எதிரணிகளும் தேர்தலுக்கு தயாராக வேண்டும் இவ்வாறு பெரமுனவின் முக்கியஸ்தரும், அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரமுனவினரால் கிராமங்களுக்குச் செல்லமுடியாது என்றும் மக்கள் ஆதரவை இழந்துவிட்டார்கள் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் எமது கட்சியே வெற்றிபெற்றது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களிலும் பெரமுனவே வெற்றிநடைபோட்டது. எனவே, நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் வெற்றி நிச்சயம். கடந்தவாரம் கிராமங்களுக்கு சென்றோம். மக்கள் முழு ஆதரவையும் வெளிப்படுத்தினர். மாற்று கட்சிகளுக்குச் செல்வதில்லை என்ற உறுதி மொழியையும் வழங்கினர். நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. பெரமுனவின் தலைமையகத்தில் தேர்தல் பணி ஆரம்பமாகிவிட்டது. எதிரணிகள்தான் தோல்வி பயத்தில் உளறிவருகின்றன - என்றார்.

(எ-44)

## ரயில் சேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.21

வடக்கு மார்க்க ரயில் சேவைகள் திருத்தப் பணிகள் காரணமாக எதிர்வரும் தை மாதம் 5ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டை முதல் அநுராதபுரம்வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அநுராதபுரத்தில் இருந்து உத்தரதேவி காலை 9.15 மணிக்கும், யாழ்தேவி பிற்பகல் 2 மணிக்கும், குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் பிற்பகல் 4.10 மணிக்கும், இரவு தபால் ரயில் இரவு 11.10 மணிக்கும் கொழும்புக்கு ரயில் சேவைகள் நடைபெறும். கல்கிசை அல்லது கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து அநுராதபுரத்துக்கு வழமையான நேரங்களில் ரயில் சேவைகள் நடைபெறும்.

அதேவேளை, யாழ் ராணி ரயில் சேவைகள் வவுனியாவில் இருந்து காங்கேசன்துறைவரை முன்னெடுக்கப்படும். காங்கேசன் துறையில் இருந்து வவுனியா நோக்கி காலை 6 மணிக்கும், வவுனியாவில் இருந்து காங்கேசன்துறைக்கு மாலை 3 மணிக்கும் யாழ்ராணி பயணத்தை ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)


**VISA Application now in process - 2023**

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

1. Student Visa, Work Visa (Minimum qualification A/L)
2. Tourist Visa – All countries
3. Visa related letters to immigration
4. Scheduled appointments
5. Online application filling
6. Translation (Tamil to English)
7. Online Police Clearance




பதிய விரும்புவோர் நேரடியாக அலுவலகத்திற்கு சமூகமளிக்கவும்.

பணியாளர் தேவை: A/L படித்த மற்றும் கணனி அறிவுடையோர் விரும்பத்தக்கது.

Lanka Cargo Worldwide Express (DHL Parcel Service)

315, Kasthuriyar Road, Jaffna. T.P: 0770385584. Email :naltcjaffna@gmail.com

**கடை வாடகைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியும், புகையிரத நிலைய வீதியும் இணையும் சந்தியில் சகல வசதியுடன் கூடிய விசாலமான கடை வாடகைக்கு உண்டு.

குறிப்பு: பலசரக்கு கடைக்கு மிகவும் உகந்தது

**076 168 9808**

**வீடு விற்பனைக்கு**

இல.67, கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகில் 1 1/2 பரப்பு காணியில் புதிய மாடி வீடு ஒன்று விற்பனைக்கு உள்ளது.

(CS 48280)

**T.P :077 002 2685**

**சாரதி தேவை**

மானிப்பாயில் உள்ள தனியார் பாடசாலைக்கு சாரதிகள் தேவை. வயது 35-55. மானிப்பாய், யாழ். நகர் பகுதியில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **077 3533 851**

**கார் விற்பனைக்கு**

TOYOTA Vitz, CBL xxxx இலக்கமுடைய வெள்ளை நிறமுடைய 2018ஆம் ஆண்டு விற்பனைக்கு உள்ளது. நல்ல தனிப்பாவனை.

தொடர்புகளுக்கு: **077 4340 889**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 102 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம்**

**077 98 65 457**

**077 81 47 389**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 36 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**


## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி விவேகானந்தராஜா

**தோற்றம் : 14.09.1943** **மறைவு: 18.12.2022**



சரவணத்தோன்றல் பத்தானை வீதி, தாவடி தெற்கு கொக்குவிலை சேர்ந்த திருமதி தெய்வநாயகி விவேகானந்தராஜா அவர்கள் கடந்த (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தையா (தபாலதிபர்-கொழும்பு) சின்னம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சிவஞானம் மனோன்மணி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற Dr.சி.விவேகானந்தராஜா (LLB Attorney at Law) அவர்களின் அன்பு மனைவியும், Dr.சுந்தரவல்லி (ஜேர்மனி), கார்த்திகேயன் (கணக்காளர்-அவுஸ்திரேலியா), Eng.ஆனந்தவல்லி (பொறியியலாளர் UK) ஆகியோரின் பாசமிகு அம்மாவும், மதியரசன் (CNC Programmer-ஜேர்மனி), அஜந்தினி (முன்னாள் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்-அவுஸ்திரேலியா), Dr.சிவகுமாரன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், சாருகன் (ஜேர்மனி), விகாசினி (அவுஸ்திரேலியா), விசாகனன் (அவுஸ்திரேலியா), சேயோன் (UK), அபிதா (UK) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரானந்தராஜா, அமிர்தானந்தராஜா, சிவானந்தராஜா மற்றும் ஏகானந்தராஜா(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**

**தகவல்: பிள்ளைகள்.**
**021 205 2627**
**071 073 4533**

(CS 22325)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: 021 493 0000 - : 021-493 1111 advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.